

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, உதகை கூட்ஸ் ஆட்டோ தொழிற்சங்கம் (LPF) துவக்க விழாவில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்டச் செயலாளர் பா.மு. முபாரக் ஆகியோருடன் கலந்துகொண்டு ஏ.டி.சி, பிங்கர்போஸ்ட் மற்றும் வி.சி காலனி பகுதிகளில் கழகக் கொடியை ஏற்றிவைத்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட, நகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர் .



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தை திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் வெள்ளகோவில் ஒன்றிய, நகர, இளைஞரணி நிர்வாகிகள், உறுப்பினர்கள் பார்வையிட்டனர்.

### அமைச்சர் கே.என்.நேரு தலைமை! கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்புரை!

# மணவாசல் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து இல்லத் திருமண விழா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலை!

புதுக்கோட்டை, ஜூன் 28 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அன்னவாசல் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் எம். கல்யாணி இவர்களது மகன் ஆர்.ஆர்.எஸ். எம்.ராஜேஸ்வரன், புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா கொப்பம்பட்டியில் வசிக்கும் ஏ. கர்ணன், சங்கிலியம்மாள் இவர்களது மகள் கே.கனிமொழி ஆகியோரது திருமணம் இன்று (28.6.2023 - புதன்கிழமை) காலை 9 மணி அளவில் விளத்து ப்பட்டி மணமகன் இல்லத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆசியுடனும், கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் நல்லாசியுடனும், கழக இளைஞரணி செயலாளர் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடனும், கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே என் நேரு தலைமையில் நடைபெறுகிறது.



புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்ல பாண்டியன் அனைவரையும் வரவேற்கிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், பி.ஆர்.பி.எம்.காந்திராஜன், எஸ்.ராமச்சந்திரன், தென்னலூர் எம்.பழனியப்பன், கே.ஆர்.என்.போஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி, எஸ். திருநாவுக்கரசர் எம்.பி , டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ,, டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ, எம்.சின்னத்துரை எம்.எல்.ஏ, எம். பழனியாண்டி எம்.எல்.ஏ, திருச்சி மேயர் மு.அன்பழகன், பி.டி.அரசக்குமார், காஜாமலை விஜய், பரணி இ.ஏ.கார்த்திகேயன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, வி.முருகேசன், வி. என்.மணி, சுப.சரவணன், அஞ்சுகாமீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா, அரு. வீரமணி, செ.அசோக் பாண்டியன், ஆ.செந்தில், டாக்டர் அஞ்சுகம் பூபதி, மு.பி.மணி, க.ரெங்கராஜ், டாக்டர் செ. குறிஞ்சி வாணன், கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், எஸ்.எஸ். கருப்பையா, ஞான.இளங்கோவன், க.மதியழகன் , பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத் அலி, என்.சேட்டு, கே. எஸ்.சந்திரன், மு.பி.ம. சத்தியசீலன், சி.சண்முகம், தவ. பாஞ்சாலன், மா.தமிழய்யா, ஒ.எஸ்.வெங்கடாசலம், வெ.முத்துக் கிருஷ்ணன், எம்.பரமசிவம், மு. க.ராமகிருஷ்ணன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், எம்.எஸ்.அக்பர் அலி, ப. அண்ணாத்துரை உ.முருகேசன், சி.ஆர்.வி.சித்ரா, என். சாத்தையா, ஆர்.செல்லத்துரை, இராசு, சந்தோஷ், கமலா செல்வம், உரக்கடை எம்.கருப்பையா, வை.கோ.ராஜன், எம்.எம்.பாலு, ராய.முத்துக்குமார் , முல்லை முபாரக், அ.ரெத்தினம், மணிமொழி மனோகரன், வே.ராஜேஸ், டி.எம்.ஆர். ராமமூர்த்தி, எம்.வேலுச்சாமி, வை. நடராஜன், மு. இளஞ்சேரன், கலைஞர் கருணாநிதி, கே.கணபதி, மழையூர் ராமசாமி, எம். சுப்பையா உதயம் சண்முகம், மிசா சி.ராமநாதன், அ. சுப்பிரமணியன், க.அடைக்கலம், அ. ஸ்ரீதேவி, ஜெ. அபுதாஹீர், எஸ்.ஜெயராமன், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், சீனி. பழனியப்பன், கே.எம்.சுப்பிரமணி யன், த.மணிராஜன், என். வீரைய்யா, ஆர். வி.செல்வம், க.கலைவாணி, பா. வெங்கடேசன், வே. பொன்துரை, பொன்.ராமலிங்கம், டி.தங்கமணி, சக்தி ராமசாமி, அ.முத்து, அ. அடைக்கலமணி, அழகு (எ) சிதம்பரம், பொன். கணேசன், ஆர்.கணேசன், வி.ஆர்.இளையராஜா, கே.எஸ்.ரவி, அரு.வடிவேல், எஸ்.குமார் (எ) துரைக்கண்ணு, எஸ்.எம். முகம்மது, க.ராஜேந்திரன், அ.அழ கப்பன், நாசர் (எ) செந்தில்குமார், ஆ.பழனிக்குமார், கே.சி.சிவக்குமார் மற்றும் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர் கழக செயலாளர் , நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### தஞ்சாவூர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தல்

# கழக வேட்பாளர்கள் அமோக வெற்றி!

தஞ்சாவூர் , ஜூன் 28 -

தஞ்சாவூர் மாவட்ட திட்டக் குழுவிற்கான தேர்தலில் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட கழக வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்றனர்.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 12 பேர் கொண்ட திட்டக்குழு உறுப்பினர் பொறுப்பிற்கு தி.மு.க சார்பில் ஊரக பகுதிகளுக்கான வேட்பாளர்களாக மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் சா.சரவணன், ஜெ.முரளி, கோ. தாமரைச்செல்வம், ஜெ.பரிமளம், த.உதயசூரியன், ஆ.சுபா, ஞா.செந்தாமரை, அ.மூர்த்தி ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

மாநகர, நகர, பேரூர் பகுதிகளுக்கான வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்ட தஞ்சாவூர் மாநகராட்சி 18வது வார்டு உறுப்பினர் அ.சசிகலா 342 வாக்குகள் பெற்றும், கும்பகோணம் மாநகராட்சி 32 வது வார்டு உறுப்பினர் அ.சாகுல்ஹமீது 338 வாக்குகள் பெற்றும் பட்டுக்கோட்டை நகராட்சி 19 வது வார்டு உறுப்பினர் ஆர்.ரவிக்குமார் 321 வாக்குகள் பெற்றும், திருவிடைமருதூர் பேரூர் 8வது வார்டு உறுப்பினர் சுந்தர. ஜெயபால் 344 வாக்குகள் பெற்றும் அபார வெற்றி பெற்றனர்.

மொத்த வாக்குகள் 1832 கழக வேட்பாளர்கள் 1345 வாக்குகள் பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்ற கழக வேட்பாளர்கள் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி, மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம். எல்.ஏ, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் ஆகியோரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### மாவட்டச்செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! எஸ்.முரளி தலைமை!

# கலைஞர் நூற்றாண்டு விழா: இயல் -இசை - நாடகம் என்ற தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம்!

## பட்டிமன்றப் புகழ் ராஜா, திருமதி.பாரதி பாஸ்கர், அருள்பிரகாஷ் சிறப்புரையாற்றுகின்றனர்!

சென்னை, ஜூன் 28 -

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் கலைஞர்100, 9வது நிகழ்ச்சியாக "நிகரில்லா தத்துவத் தலைவர் - நிலம் போற்றும் முத்தமிழறிஞர்" என்ற புகழாரத்திற்கேற்ப இயல், இசை, நாடகம் தலைப்பில் மாபெரும் கருத்தரங்கம் இன்று (28.6.2023-புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, யானைக்கவுனி, ரமணன் தெருவில் நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கில் துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி. கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர், எஸ்.ராஜசேகர் மற்றும் எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட் ஆசாத் எம்.சி., என்.பி.எம். ஷேக் அப்துல்லா, பி.ஸ்ரீராமுலு எம்.சி., ராஜேஷ் ஜெயின் எம்சி., எம்.வினாயகம், பி.விஜயகுமார், பஜெகதீஷ், மே.ஜனார்த்தனன், ம.முத்துகுமார், ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, கே. ஆர்.மதன், ஏ.பி.செந்தில், ஆர்.மாரி ஆகியோர் முன்னிலை வகிக்க. கே.ஆர்.அபரஞ்சி, கே.சரஸ்வதி, ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி.சந்தான லட்சுமி, சி.ப. ஜெயராமன், மா.ஜெய்சங் கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், சேப்பக்கம். வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர். ஏ.அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இக்கருத்தரங்கில் நாடகம் தலைப்பில் - பட்டிமன்றப் புகழ் ராஜாவும், இசை தலைப்பில் - திருமதி.பாரதி பாஸ்கரும், இயல் தலைப்பில் திரு.அருள்பிரகாசம் சிறப்புரையாற்றுகின்றனர். மேலும், இக்கருத்தரங்கில் மேயர் பிரியாஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம்கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன், ப.ரங்கநாதன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இக்கருத்தரங்கில் வட்டக்கழக செயலாளர்கள் ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சேலம் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் பதவிக்கு கழக வேட்பாளர் லதா மணிவேல் போட்டியிட்டு வெற்றி பெற்றது தொடர்ந்து கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கத்திடம் லதா மணிவேல் வெற்றி பெற்றதை சான்றிதழ் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். கெங்கவல்லி பேரூர் கழகச் செயலாளர் பாலமுருகன், பேரூராட்சி மன்ற தலைவர் லோகாம்பாள், துணைத்தலைவர் மருதாம்பாள் நாகராஜ் மற்றும் கவுன்சிலர்களான முருகேசன்,அருண்குமார், சையது, தங்கபாண்டியன், ஹம்சவர்தினிகுமார், சத்யா செந்தில் மற்றும் கழக நிர்வாகிகள் பாலசுப்ரமணியம், பிரகாஷ், செல்வ கிளின்டன், ராஜேந்திரன், வெங்கடேஷ், செல்வம், சத்யராஜ்,மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர் .

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்பநல நிதியாக

# 330 கழக உறுப்பினர்களுக்கு ரூ.16 லட்சத்து 50 ஆயிரம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், , ஜூன் 28 -

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களில் மறைந்த 330 கழக அடிப்படை உறுப்பினர்களின் குடும்பத்திற்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்பநல நிதியாக ரூ.16 லட்சத்து 50 ஆயிரத்தை அவர்களது குடும்பத்திற்கு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தான் மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றவுடன் கட்சியின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களை ஊக்குவிக்கும் விதமாக பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வருகிறார். அந்த வகையில் கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் திருமணத்திற்கும், கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் மறைந்தால் அவர்களது குடும்பத்திற்கு நல உதவிகள் வழங்கி வருகிறார்.

அந்த வகையில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களில் கடந்த 2021 - மார்ச் முதல் தற்பொழுது வரை மறைந்த கழக நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களது அஞ்சலி செலுத்தி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கி வந்துள்ளார். அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் முத்தமிழறி ஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய, நகர, பேரூர்களில் நடைபெற்றது.

நாமகிரிப்பேட்டை ஒன்றியம் சீராப்பள்ளி, இரா. புதுப்பட்டி, நாமகிரிப்பேட்டை பேரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமகிரிப்பேட்டை ஒன்றிய கழக செயலாளர் கே.பி. இராமசுவாமி, சீராப்பள்ளி பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான ந.செல்வராஜ், இரா.புதுப்பட்டி பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான பெ.ஜெயக்குமார், நாமகிரிப்பேட்டை பேரூர் செயலாளரும், பேரூராட்சி துணைத் தலைவருமான கே.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் சீராப்பள்ளியில் 15 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும், இரா.புதுப்பட்டி பேரூரில் 4 குடும்பத்தினருக்கும், நாமகிரிப்பேட்டை பேரூரில் 54 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும் என 73 கழக நிர்வாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி, தலா ரூ.5000 வீதம் ரூ. 3,65,000,

சேந்தமங்கலம் ஒன்றியம் சேந்தமங்கலம், காளப்பநாய்க்கன்பட்டி பேரூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி, ஒன்றிய கழக செயலாளர் அ.அசோக்குமார், சேந்தமங்கலம் பேரூர் செயலாளர் என்.தனபால், காளப்பநாய்க்கன்பட்டி பேரூர் செயலாளர் முருகேசன், மாவட்ட கழக துணை செயலாளர் ராணி பெரியண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் சேந்தமங்கலம் பேரூரில் 50 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும், காளப்பநாய்க்கன்பட்டி பேரூரில் 19 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும் என 69 குடும்பத்தினருக்கு தலா ரூ. 5000 வீதம் ரூ. 3,40,000,

இராசிபுரம் ஒன்றியம் அத்தனூர் பேரூர், பிள்ளாநல்லூர் பேரூர்களில் நடைபெற்ற நிகழ்வில் இராசிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளரும், ராசிபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவருமான கே.பி.ஜெகநாதன், வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளரும், ஒன்றியக்குழு உறுப்பினருமான ஆர்.எம்.துரைசாமி, பேரூர் கழக செயலாளர்கள் பிள்ளாநல்லூர் அ.சுப்பிரமணியம், அத்தனூர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் பிள்ளாநல்லூர் பேரூரில் 20 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கும், அத்தனூர் பேரூரில் 23 குடும்பத்தினருக்கும் என 43 குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,15,000,

ராசிபுரம் நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.சங்கர் முன்னிலை வகித்தார். நகரப் பகுதியில் 10 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.5,000 வீதம் ரூ.50,000,

நாமக்கல் ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஒன்றிய செயலாளர் வி.கே. பழனிவேல், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.ராணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் நாமக்கல் ஒன்றியத்தில் 41 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,05,000,

நாமக்கல் மேற்கு நகரத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மருத்துவர் இரா.மாயவன், மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நாமக்கல் நகரமன்றத் தலைவர் து.கலாநிதி, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப.ராணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் 45 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,25,000,

நாமக்கல் கிழக்கு நகரத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், தலைமை செயற்குழு உறுப்பினர் மருத்துவர் இரா.மாயவன், கிழக்கு நகர செயலாளரும், நாமக்கல் நகராட்சி துணைத் தலைவருமான எஸ்.பூபதி, நாமக்கல் நகர மன்றத் தலைவர் து.கலாநிதி, மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் ப. ராணி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் 49 கழக அடிப்படை உறுப்பினர்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 2,45,000 என மறைந்த 330 கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதியாக ரூ. 16 லட்சத்து 50 ஆயிரத்தை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி தலைவர்கள், துணைத் தலைவர்கள், சார்பு அணி நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், இலங்கைசேரி கிராமத்தில் கிராம சபை அமைக்கும் பணியினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜா.ஆனிமேரி ஸ்வர்ணா உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பழ. சுப்பையா**

**ஜூன் 28 (2022)**



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கிளைச் செயலாளர், ஊராட்சி செயலாளர், இரண்டு முறை அறந்தாங்கி ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட இலக்கிய அணி பொருளாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இடையாத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**